# இயேசுவின் திரு இருதய ஜெபமாலை

அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுவரா! பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.

**இயேசுவின் இருதயமே ( பாடல் )**

இயேசுவின் இருதயமே - என்றும்
இறங்கிடும் அருள்மயமே
உந்தன் ஆசியும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலை பெறுமே

இறைவனுக்கு இதயமுண்டு - அந்த
இதயத்தில் இறக்கமுண்டு - என்றும்
இறங்கிடும் இறைவன் இருப்பதினால் - எங்கள்
அனைவர்க்கும் வாழ்வு உண்டு



பாவிக்கு பொறுத்தல் உண்டு - அந்த
பரலோக வாழ்வு உண்டு - நாங்கள்
கூவிடும் குரலை கேட்பதற்கு - இந்த
கோவிலில் தெய்வமுண்டு

.................................................

## ஆரம்ப ஜெபம் //

**இயேசு கிறிஸ்து நாதரே சுவாமி,தேவரீர் உமது திருச்சிலுவை நாளை உலகத்தை மீட்டு இரட்சித்தீர் என்கிறதினாலே பாவியாகிய நாங்கள் உம்மை வணங்கி நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்கிறோம் சுவாமி ஆமென்.**

## பரிசுத்த ஆவி ஜெபம்

பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளி வாரும். பரலோகத்தில் நின்று உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்தர்களுடையே பிதாவே, கொடைகளைக் கொடுக்கிறவரே, இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும். உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாளியே, பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே, பிரயாசத்தின் சுகமே, வெயிலின் குளிர்ச்சியே,

அழுகையின் தேற்றரவே எழுந்தருளி வாரும். வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கின்ற பிரகாசமே உமது விசுவாசிகளுடைய இருதயங்களின் உற்பனங்களை நிரப்பும். உம்முடைய தெய்வீகமின்றியே மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. அசுத்தமாயிருக்கிறதைச் சுத்தம் பண்ணும். உலர்ந்ததை நனையும். நோவாயிருக்கிரதைக் குணமாக்கும். வணங்காதை வணங்கப் பண்ணும். குளிரோடிருக்கிரதைக் குளிர்போக்கும். தவறினதை செவ்வனே நடத்தும். உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழினையும் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்த சந்தோசத்தையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

### விசுவாசப்பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சிஷ்ட கன்னிமரியாயிடமிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கம் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து ஜீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையை விசுவசிக்கிறேன். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூதீதப் பிரயோசனத்தை விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய ஜீவியத்தை விசுவசிக்கிறேன். -ஆமென்


என் சர்வேசுரா சுவாமி ! தேவரீர் அளவில்லாத சகல நன்மையையும் அன்பும் நிறைந்தவராகையால் எல்லாவற்றிக்கும் மேலாக உம்மை நான் முழு மனதோடு நேசிக்கிறேன் இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களை செய்தேனே என்று மிகவும் மனம் நொந்து மெத்த மனஸ்தாபப்படுகிறேன் .எனக்கிதுவே மனஸ்தாபமில்லாமல் வேறு மனஸ்தாபமில்லை . எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறு துக்கமில்லை . இனிமேல் ஒருபொழுதும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று உறுதியான மனத்துடனே பிரதிக்கனை செய்கிறேன் . மேலும் எனக்குப் பலன் போதாமையால் இயேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திருஇரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களை எல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் , மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவீரென்று முழுமனதோடு நம்பியிருக்கிறேன் . திருச்சபை விசுவசித்து கற்பிக்கிற

சத்தியங்களை எல்லாம் தேவரீர் தாமே அறிவித்திருப்பதினால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன் .

## கிறிஸ்துவின் ஆத்துமமே

கிறிஸ்துவின் ஆத்துமமே என்னை அர்ச்சியும்
கிறிஸ்துவின் தேகமே என்னை ரட்சியும்
கிறிஸ்துவின் இரத்தமே என்னை பூர்ப்பியும்
திருவிலாத் தீர்த்தமே என்னை தூய்ப்பியும்
1
கிறிஸ்துவின் பாடுகள் என்னைத் தேற்றிட

அருள்நிறை இயேசுவே என்னை தேற்றிடும்
அரிய காயங்களுள் என்னை வைத்திடும்
பிரிந்திடா வண்ணமாய் என்றும் கட்டிடும்
2
பொருது சத்ருவிடம் நின்றே காத்திடும்
மரண வேளையிலே என்னை கூப்பிடும்
பரகதியில் நிதம் உம்மை வாழ்த்தவே
வருகவென்றன்போடு என்னை ஏவிடும்



**பெரிய மணியில்** :

இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

- **சிறிய மணியில்** :(மூன்று மணிகள் )
    - இயேசுவின் மதுரமான இருதயமே !
    - என் சிநேகமாயிரும் .
    - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
    - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
    - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
    - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

*1 . பிற மதத்தினர் ,பிரிவினைச் சகோதரர் அனைவராலும் இழைக்கப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக .*

- **சிறிய மணியில்** :(பத்து மணிகள் )
    - இயேசுவின் மதுரமான இருதயமே !
    - என் சிநேகமாயிரும் .
    - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
    - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
    - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
    - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

*2. மாசு நிறைந்த கிறிஸ்தவர்களால் ஏற்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக .*

- **சிறிய மணியில்** :(பத்து மணிகள் )
    - இயேசுவின் மதுரமான இருதயமே !
    - என் சிநேகமாயிரும் .
    - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
    - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
    - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
    - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

*3 . நாம் அனைவரும் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரமாக*

- **சிறிய மணியில்** :(பத்து மணிகள் )
    - இயேசுவின் மதுரமான இருதயமே !
    - என் சிநேகமாயிரும் .
    - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
    - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
    - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
    - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

*4 . மனிதர் அனைவராலும் வருவிக்கப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக .*

- **சிறிய மணியில்** :(பத்து மணிகள் )
  - இயேசுவின் மதுரமான இருதயமே !
  - என் சிநேகமாயிரும் .
  - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
  - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
  - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
  - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

*5 . எல்லோரும் திரு இருதயத்தை அறிந்து அன்பு செய்யுமாறு அமல அன்னை , புனிதர் அனைவரின் அன்புப்பெருக்குடன் ஒப்புக்கொடுப்போம் .*

- **சிறிய மணியில்** :(பத்து மணிகள் )
  - இயேசுவின் மதுரமான இருதயமே !
  - என் சிநேகமாயிரும் .
  - மரியாயின் மதுரமான இருதயமே இருதயமே !
  - என் இரட்சணியமாயிரும் .
- **பெரிய மணியில்** :
  - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே !
  - என் இருதயத்தை தேவரீருடைய இருதயத்துக்கு ஒத்ததாகப் பண்ணியருளும் .

முதல்: இயேசுவின் திருஇருதயமே!
எல்: எங்கள் மேல் இரக்கமாயிரும் .
முதல்: சென்மப் பாவமில்லாமல் உற்பவித்த புனித மரியாயின் மாசற்ற திரு இருதயமே!
எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் .

முதல்: இயேசுவின் திருஇருதயம்
எல்: எங்கும் போற்றப்படுவதாக
முதல்: திரு இருதயத் திற்கு அன்பரான கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான திருக்குடும்பத்தின் தலைவருமான புனித சுசையப்பரே
எல்: எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் .

முதல்: இயேசுவின் திரு இருதயமானது எங்கும் சிநேகிக்கப்படுவதாக

முதல்: என் இயேசுவே
பதில்; என் பேரில் **இரக்கமாயிரும்**
முதல்: என் இயேசுவே
எல்: என் பேரில் **இரக்கமாயிரும்**
முதல்: என் இயேசுவே
எல்: என் பேரில் **இரக்கமாயிரும்**

இயேசுவின் திருஇருதயமே ! உமது இராச்சியம் வருக . எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் .எனது செபம் , தபம் , அனுதின அலுவல் ,இன்பதுன்பம் எல்லாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் . எனது கடைசி மூச்சுவரை உம்மை சிநேகிக்கவும் உமக்கு மகிமை வருவிக்கவும் வேண்டிய வரம் தந்தருளும் .
- ஆமென்

## இயேசுவின் திரு இருதயதத்திற்கு புகழ் மாலை

சுவாமி கிருபையாயிரும்

கிறிஸ்துவே கிருபையாயிரும்

சுவாமி கிருபையாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்

பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா , எங்களை தயை பண்ணி இரட்சியும் சுவாமி

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா

,எங்களை தயை பண்ணி இரட்சியும் சுவாமி

தூய ஆவியாகிய சர்வேசுரா

எங்களை தயை பண்ணி இரட்சியும் சுவாமி

புனித தம த்திருத்துவமாயி ருக்கிற ஏக சர்வேசுரா

எங்களை தயை பண்ணி இரட்சியும் சுவாமி

என்றும் வாழும் பிதாவின் சுதனாகிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

பரிசுத்த கன்னித்தாயின் உதிரத்தில் தூய ஆவியால் உருவான இயேசுவின் திவ்விய இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

தேவ வார்த்தையான சுதனோடு ஒரே பொருளாய் ஒன்றித்திருக்கும் இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

அளவற்ற மகத்துவப் பிரதாபம் நிறைந்த இயேசுவின் திவ்விய இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

இறைவனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

அதி உன்னத ஆண்டவரின் உறைவிடமான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

இறைவனின் இல்லமும் விண்ணக வாசலுமான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

அன்புத் தீ சுவாலித்தெரியும் சூளையான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

நீதியும் ஸ்நேகமும் தங்கியிருக்கும் இல்லிடமான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

தயாளமும் ஸ்நேகமும் நிறைந்த இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

சகல புண்ணியங்களும் முழுமையாக நிறையப் பெற்ற இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எல்லா ஆராதனைப் புதழ்ச்சிக்கும் முற்றும் உரிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

இருதயங்களுக்கெல்லாம் அரசும் அவைகளின் மைய இடமுமான இயேசுவின் திரு இருதயமே, -

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

ஞானமும் அறிவும் நிறைந்த முழுநிறைச் செல்வமான இயேசுவின் திரு இருதயமே, -

எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

இறைத்தன்மை முழுமையாக தங்கி வழியும் இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

உம்மில் நிறைந்துள்ள நன்மைகளை நாங்கள் அனைவரும் போற்றி மகிழச் செய்யும் இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

நித்திய சகரங்களின் ஆசையாகிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

பொறுமையும் மிகுந்த தயாளமும் உள்ள இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

உம்மை மன்றாடி வேண்டும் அனைவருக்கும் நிறைவை அளிக்கும் தாராளமான இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

வாழ்வுக்கும் புனித நிலைக்கும் ஊற்றான இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எங்கள் பாவங்களின் மன்னிப்புக்கேற்ற பரிகாரமான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எங்கள் பாவச் செயல்களால் வேதனையுற்று வருந்தின இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

மரணம் வரையும் கீழ்படிந்திருந்த இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

சர்வ ஆறுதல் அனைத்தின் ஊற்றாகிய இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எங்கள் உயிரும் உயிர்ப்புமான இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எங்கள் சமாதானமும் ஒற்றுமையின் இணைப்புமாகிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

பாவங்களுக்குப பலியான இயேசுவின் திரு  இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

உம்மிடத்தில்; நம்பிக்கை வைக்கிறவர்களுடைய மீட்பரான இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

எல்லா புனிதர்களின் ஆனந்தமாகிய இயேசுவின் திரு இருதயமே, - எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியாகிய இயேசுவே !**

**எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.**

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியாகிய இயேசுவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

**உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியாகிய இயேசுவே**

**எங்களைத் தயை செய்து மீட்டருளும்.**

**முதல்வர் - இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே துணைவர் - எங்கள் இருதயம் உமது இருதயத்துக்கு ஒத்திருக்கச் செய்தருளும்.**

**செபிப்போமாக:**

**என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, உமது அன்புத் திருமகன் இருதயத்தையும் அவர் பாவிகளுக்காக உமக்குச் செலுத்தின பரிகாரத்தையும் வணக்க புகழ்ச்சிகளையும் தயை கூர்ந்து கண்ணோக்கியருளும். உமது இரக்கத்தை மன்றாடுகிறவர்களுக்கு நீர் இரங்கி, மன்னிப்பளித்தருளும்.உம்மோடு தூய ஆவியின் ஐக்கியத்தில் என்றேன்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும், உம் திருமகனுமாகிய அதே இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். -ஆமென்**

**இயேசுவின் திரு இருதயத்திற்க்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம்**

இயேசுவின் திருஇருதயமே ! கிறிஸ்தவ குடும்பங்களுக்கு தேவரீர் செய்து வரும் சகல உபகாரங்களையும் சொல்ல முடியாத உமது நன்மைத்தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பட்சத்தோடு உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம் .நேசமுள்ள இயேசுவே ! எங்கள் குடும்பங்களில் உள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம் .தேவரீர் எங்களை ஆசீர்வதித்து ,இப்போதும் எப்போதும் உமது திருஇருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும் . தவறி எங்களில் எவரேனும் உமது திருஇருதயத்தை நோகச் செய்திருந்தால் அவர் குற்றங்களுக்கு நாங்களே நிந்தைப் பரிகாரம் செய்கிறோம் .உமது திருஇருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு கிருபை செய்தருளும் . இதுவுமின்றி உலகத்திலிருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம் .பலவீனர்களுக்கு பலமும், விருத்தப்பியருக்கு ஊன்றுகோலும் ,விதவைகளுக்கு ஆதரவும் ,அனாதைப் பிள்ளைகளுக்கு தஞ்சமுமாயிருக்கத்

தயைபுரியும் .ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள் ,அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டிலும் தேவரீர் தாமே விழித்து காத்திருப்பீராக .

இயேசுவின் இரக்கமுள்ள திருஇருதயமே ! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு நேசித்தீரே ,உமது விசாரணையில் உள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம் .அவர்களை ஆசீர்வதியும் ,அவர்களுடைய திருஇருதயத்தில் விசுவாசத்தையும் தெய்வபயத்தையும் வளரச் செய்யும் .சீவிய காலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும் ,மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்க உம்மை மன்றாடுகிறோம் .

திவ்விய இயேசுவே ! முறைமுறையாய் உமது திரு சிநேகத்தில் சீவித்து மரித்து நித்திய காலமும் எங்கள் குடும்பம் முழுவதும் உம்மோடு இளைப்பாற கிருபை புரிந்தருளும் . - ஆமென்

**முதல்**:இயேசுவின் திரு இருதயமே
**பதில்**;என் நம்பிக்கையெல்லாம் உமது பேரில் வைக்கிறேன் ..3

**இயேசுவின் இருதயமே ( பாடல் )**



இயேசுவின் இருதயமே - என்றும்
இறங்கிடும் அருள்மயமே
உந்தன் ஆசியும் அருளும் சேர்ந்து வந்தால் - எங்கள்
ஆனந்தம் நிலை பெறுமே

இறைவனுக்கு இதயமுண்டு - அந்த
இதயத்தில் இறக்கமுண்டு - என்றும்
இறங்கிடும் இறைவன் இருப்பதினால் - எங்கள்
அனைவர்க்கும் வாழ்வு உண்டு

பாவிக்கு பொறுத்தல் உண்டு - அந்த
பரலோக வாழ்வு உண்டு - நாங்கள்
கூவிடும் குரலை கேட்பதற்கு - இந்த
கோவிலில் தெய்வமுண்டு

அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுவரா! பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.